4 & 5 நவம்பர் 2023

Newbec

NEW WAY OF BEING CHURCH ஆண்டின் பொதுக்காலம் 31 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
ஆயர் மன்றம் 2021 – 2023

மாதாந்திர நிகழ்வு:
திருஅவையும் கூட்டு ஒருங்கியப் பயணமும்



# திருஅவை

## இரண்டாம் வத்திக்கான் ங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

### 21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

8. ஒரே இணைப்பாளரான கிறிஸ்து இந்த உலகிலே நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றைக்கொண்ட சமூகமான தமது தூய திருஅவைக்குக் காணக்கூடிய ஓர் அமைப்பை அளித்து அதைத் தொடர்ந்து காத்து வருகிறார்; இதன் வழியாக உண்மையையும் அருளையும் எல்லாருக்கும் அவர் வழங்குகிறார். இது பல்வேறுபட்ட உறுப்புகளைக் கொண்டு நிறுவப்பட்ட சமூகமாகவும் விளங்குகிறது; மண்ணகத் திருஅவையாகவும் விண்ணக நலன்களால் நிரப்பப்பட்ட திருஅவையாகவும் திகழ்கிறது. எனினும் இவற்றை வேறுபட்ட இரு எதார்த்தங்களாகக் கருதக் கூடாது; மாறாக இவை மானிட மற்றும் தெய்வீகக் கூறுகளைக் கொண்ட ஒரே கட்டமைப்பையே உருவாக்குகின்றன. எனவேதான், மனிதரான வாக்கின் மறை நிகழ்ச்சிக்கு ஏற்ற உவமையாக இது ஒப்பிடப்பெறுகிறது. கடவுளின் வாக்கு தமதாக்கிய மனித இயல்பு எவ்வாறு நிறைவாழ்வின் உயிருள்ள ஒரு கருவியாக அவரோடு பிரிக்க முடியாதவாறு இணைந்து அவருக்குப் பணிபுரிகின்றதோ, அவ்வாறே திருஅவையின் சமூக அமைப்பும், அதற்கு உயிரூட்டுபவரான கிறிஸ்துவின் ஆவியாருக்கு அவ்வுடல் வளர்ச்சி பெற உதவுகிறது (எபே 4:16)

இதுதான் கிறிஸ்துவின் ஒரே திருஅவை. இதைத்தான் நம்பிக்கை அறிக்கையிலே நாம் ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதுத் திருஅவையென வெளிப்படையாக அறிக்கையிடுகிறோம். அருள்பணி புரிவதற்கே நம் மீட்பர், தாம் உயிர்த்தெழுந்த பிறகு பேதுருவிடம் இத்திருஅவையை ஒப்படைத்தார் (யோவா 21:17). அவரிடத்திலும் ஏனைய திருத்தூதர்களிடத்திலும் இதைப் பரப்பவும் வழிநடத்தவும் வேண்டிய பணியை ஒப்படைத்தார் (மத் 28:18 தொ.). இதையே எக்காலத்திற்கும் உண்மைக்குத் "தூணும் அடித்தளமுமாய்" (1 திமோ 3:15) அமைத்தார். இவ்வுலகில் ஒரு சமூகமாக நிறுவப் பெற்றதும் ஒழுங்குமுறையில் அமைந்ததுமான இந்தத் திருஅவை பேதுரு வழிவருபவராலும், அவரோடு ஒன்றித்திருக்கும் ஆயர்களாலும் வழிநடத்தப்படும் கத்தோலிக்கத் திருஅவையில் உள்ளது. இதன் அமைப்பிற்கு வெளியே தூய்மைநிலை, உண்மை ஆகியவற்றின் கூறுகள் பல காணப்பட்டபோதிலும், இவை கிறிஸ்துவின் திருஅவைக்கே உரித்தான கொடைகள் என்ற முறையிலே கத்தோலிக்க ஒற்றுமைக்குத் தூண்டுதலாயிருக்கின்றன.

கிறிஸ்து வறுமையிலும் துன்பத்திலுமே மீட்புப் பணியைச் செய்து முடித்தார். அதுபோல மீட்பின் பலன்களை மனிதருக்கு வழங்க, திருஅவையும் அதே பாதையில் அடியெடுத்து வைக்கவே அழைக்கப்பெறுகிறது. "கடவுள் வடிவில் விளங்கிய" கிறிஸ்து இயேசு "தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலி 2:6-7). மேலும் அவர், நமக்காக "செல்வராயிருந்தும் ... ஏழையானார்" (2 கொரி 8:9). அதுபோல, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை ஆற்றத் திருஅவைக்கு மனித வளங்கள் தேவைப்பட்ட போதிலும், மண்ணுலக மாட்சியைத் தேடுவதற்கென்று அது ஏற்பட்டதல்ல மாறாக, மனத் தாழ்மையையும், தன்னல மறுப்பையும் தனது முன்மாதிரியால் பரப்புவதற்காகவே திருஅவை நிறுவப்பட்டுள்ளது. "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், உள்ளம் நொறுங்கியோரைக் குணப்படுத்தவும்" (லூக் 4:18), "இழந்து போனதைத் தேடி மீட்கவுமே" (லூக் 19:10) தந்தையால் கிறிஸ்து அனுப்பப்பெற்றார். அதுபோலவே திருஅவையும் மனித வலுவின்மையால் பாதிக்கப்பட்ட எல்லாரையும் அன்புடன் அரவணைக்கிறது. ஏன், வறியவரும் துன்புற்றவருமான தன் நிறுவுனரின் உருவை வறியோரிலும் துன்புறுவோரிலும் காண்கிறது; அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய முனைகிறது. அவர்கள் மூலம் கிறிஸ்துவுக்கே தொண்டு ஆற்ற உளங்கொள்கிறது. "தூயவர், கபடற்றவர், மாசற்றவர்" (எபி 7:26) என விளங்குபவரும் பாவமே அறியாதவருமான கிறிஸ்து (2 கொரி 5:21) மக்களின் பாவங்களுக்குக் கழுவாயாகுமாறு வந்தார் (எபி 2:17) திருஅவையோ பாவிகளைத் தன்னுள் கொண்டிருப்பதால்தான் தூயதாயிருப்பினும் எப்பொழுதும் தூய்மைப்படுத்தப்பட வேண்டிய தேவையைத் தன்னில் கொண்டு மனமாற்றம், சீர்திருத்தம் என்னும் பாதையிலேயே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

ஆண்டவர் வரும்வரை அவரது சிலுவையையும் சாவையும்அறிக்கையிட்டு (1 கொரி 11:26), "உலகின் துன்பங்கள், கடவுளின் ஆறுதல்கள் இவற்றின் நடுவிலே திருஅவை வழிநடந்து முன்னேறிச் செல்கிறது".14 உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றலால் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் தனக்குவரும் இன்னல்களையும் இடுக்கண்களையும் பொறுமையாலும் அன்பாலும் முறியடிக்கவும் கடவுளின் மறைபொருள் இறுதியிலே தன் முழு மாட்சியுடன் தெளிவாக வெளியிடப்படும் வரை, மங்கிய முறையிலானாலும் உண்மையுடன் அதை உலகிற்குக் காட்டவும் திருஅவை உறுதி பெற்றிருக்கிறது.




தயாரித்தவர்கள்:
செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு
Austin Flannery OP, 1975

திருத்தம்:
மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

இந்த கோட்பாடு தொடர்பான உங்கள் மதிப்பீடுகளை– மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மைய (API) மின்னஞ்சலுக்கு directorapikl@gmail.com அனுப்பவும்.

INTERNAL CIRCULATION ONLY

BUL 45/2023